Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 29.03.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 29.03.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மேற்காசிய போரால் ஏற்பட்டுள்ள பதற்றத்தை மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, எதிர்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோடை வெப்பம் அதிகரித்து வரும் வேளையில், அனைவரும் தண்ணீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் குருத்தோலை ஞாயிறு இன்று கொண்டாடப்பட்டது.

காரைக்கால் மாவட்டத்தில், வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில், வாக்காளர் தகவல் சீட்டு வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

*மன் கீ பாத் -1 (17)*

மேற்கு ஆசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, பெட்ரோல் டீசல் விநியோகத்தில் நெருக்கடி உருவாகி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர், இன்று காலை, 132ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை

பகிர்ந்து கொண்டார். இந்தியாவின் எரி சக்தித் தேவைகளின் முக்கிய மையமாக இப்பிராந்தியங்கள் திகழ்வதால், இது ஒரு சவாலான கால கட்டம் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் உலகளாவிய உறவுகள் மற்றும் பல்வேறு நாடுகளின் ஆதரவு கடந்த 10 ஆண்டுகளில், புதுடெல்லி கட்டமைத்துள்ள பலம் ஆகியவை இந்த சூழ்நிலைகளை எதிர்கொள்ள உதவி உள்ளதாக, அவர் தெரிவித்தார். கோவிட் பெருந்தொற்றின் போது, இந்தியா வெற்றி கண்டதைப் போலவே இந்த கடினமான சூழ்நிலைகளில் இருந்தும் நாடு வெற்றி பெறும் என்றும் அவர் கூறினார்.

லட்சக் கணக்கான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் வசிப்பதாக குறிப்பிட்ட பிரதமர், ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் வழங்கி வரும் அந்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார். இந்த சவாலை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

*மன் கீ பாத் - 2 (13)*

இந்த விவகாரத்தை அரசியல் ஆக்குபவர்களை விமர்சித்த பிரதமர் அவர்கள் அவ்வாறு செய்வதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது 140 கோடி மக்களின் நலன் சார்ந்தது என்றும், இதில் அரசியலுக்கு இடமில்லை என்றும் அவர் கூறினார்.

வதந்திகளை ஏற்படுத்துபவர்கள் நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள் என்றும் அவர் கூறினார். அனைத்து குடிமக்களும், விழிப்புடன் இருக்குமாறும், வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அரசால் வழங்கப்படும் தொடர்ச்சியான தகவல்களை மட்டுமே நம்பவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

கோடை வெப்பம் அதிகரித்து வரும் இந்த சூழலில் நீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

(வாய்ஸ்)

*மன் கீ பாத் - 3 (15)*

(வாய்ஸ்)

கடந்த 11 ஆண்டுகளில் நீர் சேமிப்பு இயக்கம் காரணமாக மக்களிடையே அதிக அளவில் நீர் பராமரிப்பு ஏற்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். இந்த இயக்கம் காரணமாக நாடு முழுவதும், சுமார் 50 லட்சம் செயற்கை நீர் சேமிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுமார் 70 ஆயிரம் அமிர்த நீர்நிலைகள் உருவாக்கப் பட்டுள்ளன என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்த நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் கூறினார். மேலும், மீனவர்கள் நாட்டின் அடித்தளங்கள் என்று கூறிய பிரதமர் அவர்களின் நலனில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக

தெரிவித்தார். அரசின் முயற்சிகளால் மீன் வளம் தன்னிறைவு பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார்.

மீன்வளம், கடற்பாசி துறை போன்றவைகளில் புதுமைகள் ஏற்படுத்தப்பட்டு, மீனவ சகோதர – சகோதரிகள் தற்சார்பு உடையவர்களாக மாறியுள்ளனர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். மீன்வளம், மீன் பதப்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு, ஆதாயம் அடைந்த சிலரது வெற்றிக் கதைகளையும் அவர் பட்டியலிட்டார்.

*மன் கீ பாத் - 4 (5)*

சின்ன சின்ன முயற்சிகளும் பெரிய மாற்றங்களை உருவாக்கி வருவதாக, அவர் தெரிவித்தார். மரம் நடும் நிகழ்ச்சியில் ஒரே மணி நேரத்தில் 2 லட்சத்து 51 ஆயிரம் மரங்கள் நடப்பட்டு, புதிய கின்னஸ் சாதனை நிகழ்த்தப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார். அன்னையின் பெயரில் ஒரு மரம் நடுவோம் என்ற இயக்கத்தின் மூலம், கோடிக்கணக்கான மரங்கள் நடப்பட்டதாக பிரதமர் குறிப்பிட்டார்.

*மன் கீ பாத் - 5 (19)*

பிரதமரின் சூரிய வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம், நாட்டில் புரட்சி ஏற்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இந்த திட்டத்தில் மக்கள் அனைவரும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இதனால் மக்களின் வாழ்வில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

நாகாலந்தில், சமுதாய விதை வங்கியில் பாரம்பரிய ரக விதைகள் பாதுகாக்கப் பட்டு வருவதாக, பிரதமர் தெரிவித்தார். 150க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதை ரகங்கள் நாகாலந்து மாநில கிராமங்களில் பாதுகாக்கப் பட்டு வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். மேலும், விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் பிரதமர் பட்டியலிட்டார்.

டி-20 உலகக் கோப்பையை இந்தியா வென்றது, ஜம்மு – காஷ்மீர் கிரிக்கெட் அணி முதன் முதலாக ரஞ்சி கோப்பையை வென்றது ஆகியவைகள் விளையாட்டுத் துறையில் மிகப் பெரிய சாதனைகள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும், பிரதமர் தமது உரையில், உடல் நலம் மற்றும் உடல் தகுதிக்கு முக்கியத்துவம் அளித்துப் பேசினார். சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்றவும் சர்க்கரை, எண்ணெய் பயன்பாட்டை குறைக்கவும். யோகாவை கற்றுக் கொள்ளவும் வலியுறுத்தினார்.

*ஞாயிறு குருத்தோலை (10)*

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாட்கள் தவக் காலத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் குறுத்தோலை ஞாயிறு கடைபிடிக்கப்படுகிறது. இந்த தினம் புனித வாரத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு ஜெருசலேமுக்குள் வெற்றி பவனியாக நுழைந்ததை நினைவு கூறும் வகையில், குருத்தோலை ஞாயிறு இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. நாட்டின்

வெவ்வேறு தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகளும், ஊர்வலங்களும் நடைபெற்றன. இந்நாளில் கிறித்தவர்கள் தங்கள் கைகளில் குருத்தோலைகளை ஏந்தி ஊர்வலமாக ஓசன்னா என்ற பாடலைப் பாடி செல்வர். கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று காலை இந்நிகழ்வு நடைபெற்றது.

*ராஜ்நாத் சிங் (17)*

மேற்கு ஆசியாவில் உருவாகி வரும் சூழலை கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கையுடன் கூடிய ஒருங்கிணைந்த மற்றும் தொலைநோக்குப் பார்வை அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். நேற்று மாலை புதுடெல்லியில், பல மூத்த அமைச்சர்கள் அடங்கிய முறைசாரா அமைச்சர்கள் குழுவின் கூட்டத்திற்கு, தலைமைத் தாங்கிப் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திருமதி. நிர்மலா சீதாராமன், திரு. ஹர்தீப் சிங் புரி, திரு. ஜெ.பி. நட்டா, திரு. ஜிதேந்திர சிங், திரு. கே. ராம்மோகன் நாயுடு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் மோதலின் பின்னணியில் எரிசக்தி விநியோகத்திற்கான அபாயங்கள், அத்தியாவசியப் பொருட்களின் உள்நாட்டு இருப்பு ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். நிலைமையைத் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணிப்பது, நடுத்தர மற்றும் நீண்ட கால தயார்நிலை அணுகுமுறையை கடைபிடிப்பது, உயர்மட்ட ஒருங்கிணைப்பை பேணுவது ஆகியவற்றை வலியுறுத்தி,

செயலர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுக்களுக்கு அவர் வழிகாட்டுதல்களை வழங்கினார்.

*பழங்குடியினர் (19)*

இந்தியாவின் பழங்குடியின சமூகங்கள் இயற்கையுடனான நல்லிணக்கத்தின் சக்திவாய்ந்த அடையாளமாக திகழ்கின்றன என்றும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் கலாச்சார பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் பழங்குடியினர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. துர்கா தாஸ் உய்கே கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பாரத் பழங்குடியினர் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், பழங்குடியின சமூகங்கள் பல நூற்றாண்டுகளாக காடுகள், நீர் நிலம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தின் சமநிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவித்தார். அவர்களின் பாரம்பரிய அறிவு மற்றும் நிலையான வாழ்க்கை முறை, உலகிற்கு மதிப்புமிக்க அனுபவங்களை வழங்கி வருவதாக, அவர் தெரிவித்தார்.

இடைத்தரகர்கள் பழங்குடியின மக்களின் உற்பத்திப் பொருட்களான மஹுவா, டெண்டு இலைகள், தேன், அரக்கு மற்றும் சால் விதைகள் போன்றவற்றை குறைந்த விலைக்கு வாங்குவதன் மூலம் அவர்களுக்கு சரியான வருமானம் கிடைக்க வில்லை என்றும் அவர் கூறினார். பதப்படுத்துதல், பேக்கேஜிங் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் அவர்களுக்கு போதிய பயிற்சி அளிப்பதன் மூலம்

அவர்களின் வாழ்வு மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார். அவர்களின் வாழ்வு மேம்பட, சுய உதவிக் குழுக்களைக் கொண்டு தொடர்ந்து, மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*காரைக்கால் – தேர்தல் (10)*

காரைக்கால் மாவட்டத்தில், தேர்தல் நடத்தும் அதிகாரி செல்வி. எம். பூஜா தலைமையில் இன்று காரைக்கால் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில், வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, வீடு வீடாகச் சென்று தகவல் சீட்டுக்களை வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் தினத்தன்று வாக்களிக்க செல்லும்போது, தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 12 அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை கட்டாயம் எடுத்து வருவது குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

*பிரதமர் கேர□ா -1 (11)*

கேரள மாநிலத்தில் வருகிற 9ஆம் தேதி சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. தேர்தலை முன்னிட்டு, பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று கேரள மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். பாலக்காட்டில் நடைபெற்ற பேரணியில் அவர் பங்கேற்றார். திருச்சூரில் நடைபெறும்

சாலைப் பேரணியிலும் அவர் பங்கேற்கிறார். இது தொடர்பாக சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறுகையில், கேரளாவின் மனநிலை தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாக இருப்பதாக தெரிவித்தார். இடது ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆகியவற்றின் மோசமான ஆட்சியால் மக்கள் சலிப்படைந்து விட்டதாக அவர் தெரிவித்தார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*பிரதமர் கேர□ா - 2 (11)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திரமோடி கோயம்புத்தூரில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் தமது கேரள பயணத்தை தொடங்கி, பாலக்காட்டில் உள்ள மெர்ஸி கல்லூரி மைதானத்தில் தரையிறங்கினார். அங்கிருந்து சாலை மார்க்கமாக, விழா நடைபெறும் மைதானத்திற்கு செல்கிறார் பின்னர் அங்கு நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோட்டை மைதானத்தில் பிரதமர் விழாவில் உரையாற்றுகிறார். பின்னர், பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் NDA வேட்பாளர்களுடன் பிரதமர் கலந்துரையாடுகிறார். பின்னர், திருச்சூர் மாவட்டத்திற்குச் சென்று, வாகனப் பேரணியில் பங்கேற்கிறார். திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த NDA வேட்பாளர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

*ஐபிஎல் (6)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில். மும்பை இண்டியன்ஸ் அணியும் – கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், இன்று மும்பை வான்கடே மைதானத்தில் மோதுகின்றன. போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்க உள்ளது. நேற்றிரவு நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி, ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது குறிப்பிடத்தக்கது.

*அமித் ஷா – அஸ்ஸாம் (11)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, அஸ்ஸாம் மாநிலம் சோனித்பூர் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், அஸ்ஸாமில் சட்டவிரோத குடியேற்றத்தை பிஜேபி தடுத்து நிறுத்தியது என்றும் அடுத்த 5 ஆண்டுகளில் அவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார். மாநிலத்தின் பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்பட்ட வளங்களுக்கு சட்டவிரோத குடியேறிகள் அழுத்தம் கொடுப்பதால், அவர்களை நாடு கடத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், பல அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை மீட்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேலும் சுமார் 10 ஆயிரம் தீவிரவாதிகள் சரணடைந்து உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்காசிய போரால் ஏற்பட்டுள்ள பதற்றத்தை மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, எதிர்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோடை வெப்பம் அதிகரித்து வரும் வேளையில், அனைவரும் தண்ணீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் குருத்தோலை ஞாயிறு இன்று கொண்டாடப்பட்டது.

காரைக்கால் மாவட்டத்தில், வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில், வாக்காளர் தகவல் சீட்டு வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.